செ.வெ.எண்: 643 நாள்: 05.11.2020

**ஊடகத்துறையினரால் அடையாளம் காட்டப்பட்ட இரண்டு கால்களையும் இழந்த புதுக்கோட்டை இளைஞருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று உதவிகளை வழங்கினார்.**

---

ஊடகத்துறையினரால் அடையாளம் காட்டப்பட்ட புதுக்கோட்டை வட்டம், மேலவிடுதி கிராமத்தில் இரண்டு கால்களையும் இழந்த 27 வயதுடைய ராஜாவின் இல்லத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.11.2020) நேரில் சென்று பட்டா மாறுதல் ஆணையினை வழங்கினார். பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை வட்டம், மேலவிடுதி கிராமத்தில் ராஜா என்ற 27 வயது இளைஞர் 2 கால்களும் இல்லாத நிலையில் சிரமப்பட்டு வருவதாக ஊடகத்துறை நண்பர்கள் தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து அலுவலர்கள் மூலம் ராஜாவை நேரில் சந்தித்து அவரது கோரிக்கைகள் கேட்டறியப்பட்டது. இதில் தான் குடியிருக்கும் வீட்டிற்கு பட்டா மாறுதல் ஆணை வேண்டி கோரியிருந்தார்.

உடனடியாக அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்றையதினம் ராஜாவின் வீட்டிற்கு நேரடியாக சென்று பட்டா மாறுதல் ஆணை வழங்கப்பட்டது. மேலும் ராஜாவின் இல்லத்திற்கு ஊராட்சியின் சார்பில் கழிவறை கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. இவருக்கு ஏற்கனவே உதவித்தொகை மாதம்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று மாற்றுத்திறனாளிகள் நலஅலுவலகத்தின் சார்பில் மோட்டார் பொறுத்தப்பட்ட இருசக்கர வாகனம் வழங்கவும், சுயதொழில் செய்ய வங்கி கடன் வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவரின் வாழ்வாதாரத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடையத் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 4 ஆண்டுகளாக தனது கணவருக்கு பக்க பலமாக அனைத்து உதவிகளையும் செய்து வரும் அவரது மனைவி விமலாவிற்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, வட்டாட்சியர் முருகப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**